**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

***IN THE COURT OF District Munsif – cum – Judicial Magistrate Vilathikulam .***

***C.C.* 271 /2022**

**Deposition of Witness for Prosecution P.W. 2**

Name :: காசிலிங்கம்

Father Name :: ராஜேந்திரன்

Village :: விளாத்திகுளம்

Taluk :: விளாத்திகுளம்

Age :: 32 Years

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on **the 15th day of June 2023.**

நாள்: 15/06/2023

முதல்விசாரணை

முதல்விசாரணை

1. நான் தற்போது விளாத்திகுளம் காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணி புரிந்து வருகிறேன்.

2. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் காசிலிங்கம் என்பவரின் கையொப்பம் எனக்கு நன்கு பரிச்சயம் என்ற அடிப்படையிலும் வழக்கு ஆவணங்கள் அடிப்படையிலும் சாட்சி அளிக்கிறேன்.

3. கடந்த 15.10.2021 தேதி தலைமை காவலர் லெனின் கிங்ஸ்லி என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது முருகன் என்பவரின் புகார் மனு பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 502/2021 பிரிவுகள் 341, 294(பி), 387, 506(2) இதச படி வழக்கு பதிவு செய்துள்ளார்.

4. **புகார் மனு அ.சா.ஆ. 1 ஆகும். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 2** ஆகும்.

5. அசல் புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கை ஆகியவற்றை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், விசாரணை நகலை உதவி ஆய்வாளர் அவர்கள் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டுள்ளார்.

6. மேற்படி வழக்கை உதவி ஆய்வாளர் புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு கடந்த 15.10.2021 ம் தேதி காலை 09.40 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பரமசிவன், இளையராஜா ஆகியோர்கள் முன்னிலையில்

சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார்.

7. அந்த **பார்வை மகசர் அ.சா.ஆ. 3 ஆகும்**.

8. **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4** ஆகும்.

9. இவ்வழக்கின் தொடர்புடைய சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின் சம்பவ இடத்தில் இருந்து சம்பவ பொருளை அத்தாட்சி மூலம் கைப்பற்றியுள்ளார். அதே சாட்சிகள் முன்னிலையில் அதே சாட்சிகளிடம் அத்தாட்சியில் கையொப்பம் பெற்றுள்ளார். அந்த **அத்தாட்சி அ.சா.ஆ. 5 ஆகும். அருவாள் அ.சா.பொ.1 ஆகும்.**

10. இவ்வழக்கில் தொடார்புடைய எதிரியை 15.10.2021 ம் தேதி 13.00 மணிக்கு கைது செய்து சொத்துக்கள் சகிதம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

11. பின்பு சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்தும் அவரது விசாரணையில் இருந்தும் மேற்படி நடந்த சம்பவம் உண்மை என்று தெரிய வந்தபடியால் மேற்படி எதிரி மீது 07.12.2021 ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. இவ்வழக்கின் வாக்குமூலம் பின்னிட்டு உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல.

2. வழக்கு சம்மந்தப்பட்ட பார்வை மகசர், மாதிரி வரைபடம் ஆகியவை பின்னிட்டு உருவாக்கப்பட்டவை என்றால் சரியல்ல.

3. இவ்வழக்கில் எதிரி மீது பொய்யான குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.